# துறையூர் நகராட்சி

2020ஆம் வருடம் ஜுலை மாதம் 10.07.2020ஆம் வெள்ளி கிழமை (தமிழ் விகாரி வருடம் ஆனி மாதம் நாள்.26) பிற்பகல்11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட்ட அவசர கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.து. தமயந்தி,
தனி அலுவலர்

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>10.07.2020</td><td>01</td><td>துறையூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM 2020-21) நிதியின் கீழ் புதிதாக தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.382.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு எண்</th><th>சாலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்)</th><th>மொத்தத் தொகை (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td></td><td></td><td colspan="3">சிப்பம் - I</td></tr>
<tr><td>1</td><td>1</td><td>கோவிந்தாபுரம் காலனி சாமிநகர் மற்றும் அம்பாள் நகர்</td><td>30.70</td><td rowspan="2">122.00</td></tr>
<tr><td>2</td><td>9</td><td>கீரம்பூர் காலனி மற்றும் அமுதசுரபி நகர்</td><td>21.50</td></tr>
</table>
</td><td>தீர்மான எண்:455 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 24 | குடில் ரோடு குறுக்குத்தெரு மற்றும் எக்ஸ்டென்சன் KV Bank பின்புறம் | 37.60 | |
| 4 | 24 | அஷ்டலெட்சுமி நகர் மற்றும் செல்வம் நகர் குறுக்குத்தெரு | 32.20 | |
| | | **சிப்பம் - II** | | |
| 5 | 9 | பெரியார் நகர் | 26.80 | 130.00 |
| 6 | 18 | சொரத்தூர் ரோடு குறுக்குத்தெரு | 72.40 | |
| 7 | 19 | மலையப்பன் சாலை குறுக்குத்தெரு | 30.80 | |
| | | **சிப்பம் - III** | | |
| 8 | 9 | சாமிநாதன் நகர் | 69.70 | 130.00 |
| 9 | 19 | அம்மாப்பட்டி சாலை | 28.10 | |
| 10 | 24 | சுந்தராபுரம் | 32.20 | |
| | | **மொத்தம்** | | **382.00** |

ந.க.எண்.1833/2020/இ1

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

ஒம்/-து.தமயந்தி
தனி அலுவலர்

/உண்மை நகல் /

**துறையூர் நகராட்சி**

2020 ஆம் வருடம் ஜுலை மாதம் 31.07.2020 வெள்ளி கிழமை ( தமிழ் சார்வரி வருடம் ஆடி மாதம் நாள்.16) முற்பகல்10.15 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.து. தமயந்தி,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 31.07.2020 | **01** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) ஜுலை மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ.கு :**பதிவு செய்யலாம் | தீர்மான எண்:456 பதிவு செய்யப்பட்டது |
| 31.07.2020 | **02** | துப்புரவு அலுவலர் ஜுலை மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ.கு :**பதிவு செய்யலாம். | தீர்மான எண்:457 பதிவு செய்யப்பட்டது. |
| 31.07.2020 | **03** | திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம் துறையூர் நகராட்சிக்குட்பட்ட புல எண்களுக்கு பெரம்பலூர்-முசிறி-துறையூர்-ஆத்தூர் சாலை இணைக்கும் துறையூர் புறவழிச்சாலை கட்டம்-2 அமைக்கும் பணிக்கு நிலம் கையகம் செய்வது தொடர்பாக நெடுஞ்சாலை துறையிடமிருந்து நிலகேட்பு அட்டவணை(LPS) வரப்பெற்றுள்ளது.<br>மாவட்டம்: திருச்சிராப்பள்ளி, வட்டம்: துறையூர், கிராமம்: 48 துறையூர் டவுன் அரசு புறம்போக்கு நிலங்கள் | தீர்மான எண்:458 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>கிராம புல எண்</th><th>மொத்த பரப்பு (ஹெக்/ஏர்ஸ்)</th><th>வகை பாடு</th><th>கையக பரப்பு (ஹெக்/ஏர்ஸ்)</th><th>கையக நிலத்தின் தன்மை</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>வார்டு-D பிளாக்-05 T.S.NO. 1/1</td><td>0.13.50</td><td>அ.புறம் போக்கு</td><td>0.01.25</td><td>வாரி</td><td>வாரி</td></tr>
<tr><td></td><td colspan="3">மொத்தம்</td><td>0.01.25</td><td></td><td></td></tr>
</table>
மேற்கண்ட புல எண்களுக்கு ஒப்புதல் தீர்மானம் அளிக்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.826/2020/எப்1<br><br>
அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2020</td>
<td>04</td>
<td>இந்நகராட்சியில் இந்துஅறநிலைதுறைக்கு சொந்தமான பெரியஏரி ஆயக்காட்டு சர்வே எண் 63/2 ஏக்கர் 2.01 சர்வேஎண் 63/7 ஏக்கர் 0.34 செண்ட் ஆககூடுதல் ஏக்கர் 2.35 செண்ட் நஞ்சை நிலம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கபட்டு நகராட்சி விளை நிலத்தினை பொது ஏலத்தில் விடப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது மேற்படி குத்தகை இனம் 10.07.2019 தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் நிர்வாக அலுவலர் அருள் மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோவில் அவர்கள் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 8.6.2002ம் தேதிய கடித்தில் மேற்காணும் நஞ்சை நிலம் இந்து அறநிலைதுறைக்கு சொந்தமான காசிகுளம் பாசனப்பகுதி 2,35 ஏக்கர் செண்ட் நஞ்சை நிலம் குத்தகை காலம் முடிவுற்றதால் மேற்படி பாசன நிலத்தை திருக்கோவில் தேவஸ்னத்திடம் ஒப்படைக்க கடிதம் கிடைக்கபெற்றுள்ளது மேலும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் ஏலவைப்புதொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்த வேண்டாம் என அறிவிப்பு ஆட்சோபனை தெரிவித்தவர்களு அனுப்பட்டுள்ளது மேலும் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோவில் துறையூர் அவர்களுக்கு</td>
<td>தீர்மான எண்:459 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பிவைக்கப்பட்டு பொதுஏலம் ஒப்பந்தப்புள்ளி 10.07.2019 அன்று நடைபெறுவதை நிறுத்தி வைக்கப்பட்டது மேலும் மேற்காணும் 2.35 சென்ட்நிலம் கோவில் நிர்வாகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்தால் 2019-2020-ம் ஆண்டிற்கும் மற்றும் 2020-2021 ஆண்டிற்கும் கேட்பு எழுப்படவில்லை இவ்வினத்தை வரியில்லா இனத்திலிருந்து முழுமையாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.380/2020/அ1)<br><br>**அலுவலககுறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் | |
| 31.07.2020 | **05** | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் இயந்திரம் ஒன்று வைத்து கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் 2018-2019-ம் ஆண்டு எடைபார்க்கும் இயந்திரம் மூலம் உரிமம் எடுத்தவர்ருக்கு போதிய வருவாய் இல்லாமல் நஷ்டத்தில் இருந்நதால் 2019-2020-ம் ஆண்டு நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை இதனால் 2019-2020-ம் ஆண்டுக்கு கேட்பு இல்லை இவ்வினத்தினை எடுத்து நடத்திகொள்ள பொதுமக்கள் யாரும் விருப்பம் தெரிவிக்கவில்லை இதனால் இவ்வினம் தொடர்ந்து ஏலம் போவதற்கு வாய்பில்லை மேலும் இவ்வினத்திற்கு 2020-2021-ம்ஆண்டிற்கு கேட்பு இல்லை இதனால் இவ்வினத்தை வரியில்லா இனத்திலிருந்து முழுமையாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.380/2020/அ1)<br><br>**அலுவலககுறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:460 அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **06** | இந்நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடை எண் 18 ஏலம் போகமல் நகராட்சி வசம் இருந்தது. இவ்வினம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 5.03.2020 தேதியில் கோரப்பட்டது. G.கோபாலகிருஷ்ணன் என்பவர் ஏலத்தில் கலந்து கொள்ள 04.03.2020ம் தேதிய தனது விண்ணபத்தில் B.கோபாலகிருஷ்ணன் என விண்ணப்பித்துள்ளார் இதன் பெயரில் ஏலபதிவேடு மற்றும் கடைக்கான மன்றப்பொருளில் G.கோபாலகிருஷ்ணன் என்பதற்கு பதிலாக B.கோபாலகிருஷ்ணன் என கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.. கோபாலகிருஷ்ணன் என்பவரின் தந்தையார் பெயர் (கணேசன்) என்பதால் அன்னாரின் குத்தகை உரிமத்தில் | தீர்மான எண்:461 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>இன்சியல் B என்பதை மாற்றி G என (கணேசன்) மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 380/2020/அ1<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2020</td>
<td>07</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.07.2020ம் தேதிகோரப்பட்டது. வரிசை 1 முதல் 5 வரை கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண் .</th><th>குத்தகை இனம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.</td></tr>
<tr><td>2.</td><td>துறையூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம்.</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>4.</td><td>வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17(ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)</td></tr>
<tr><td>5.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).</td></tr>
</table>
<br>ந.க.எண்.380/2020/அ1</td>
<td>தீர்மான எண்:462 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு** :<br><br>மேற்காணும் குத்தகை இனங்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளது என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.2,3,4, மற்றும் 5-ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகாததால் கேட்பு இல்லை எனவும் வரிசை எண்.1, இந்நகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில் 01.06.2020-ம் தேதி முதல் பேருந்துகள் குறைவான அளவில் வந்து செல்கிறது. இப்பேருந்துகளிடம் தினசரி கட்டணம் வசூல் இந்நகராட்சி பணியாளரை கொண்டு வசூல் செய்து இந்நகராட்சியில் செலுத்தப்பட்டு வருகிறது. என்பதனை பதிவு செய்யவும் மேற்காணும் வ.எண்.1 முதல் 5 வரை உள்ள இனங்கள் மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.07.2020 | **08** | துறையூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தின் முன்புறம் உள்ள கட்டிடம் பழுதடைந்த காரணத்தினால் இடிக்கப்பட்டு தற்போது காலியிடமாக உள்ளது. மேற்படி இடிக்கப்பட்ட கட்டிடத்தில் பொதுமக்கள் அறியும் வகையில் பேருந்து நிலையம் பெயர் பலகை இருந்து வந்தது. தற்போது அவ்விடம் காலியாக உள்ளதால் வெளியூர் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் அறியும் வண்ணம் அவ்விடத்தின் முன்புறம் புதிதாக அண்ணா பேருந்து நிலையம் பெயர் பலகை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1801/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அண்ணா பேருந்து நிலையம் பெயர் பலகை அமைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:463<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 31.07.2020 | **09** | துறையூர் நகராட்சியில் 14வது மத்திய நிதி ஆணையம் (14th CFC) 2019-20 திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மற்றும் தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.8669/- மட்டும் Adwave Advertising Private Limited, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண். 34/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் :464<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **10** | துறையூர் நகராட்சி வார்டு எண்.19, மலையப்பன் சாலை பகுதியில் சீரான குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதிக்கு பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.25 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1922/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:465<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **11** | துறையூர் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளுக்கும் காவிரி குடிநீர் முசிறி-அய்யம்பாளையத்திலிருந்து பெறப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு அனைத்து பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் உள்ள Gate Valve-களில் நீர்க்கசிவு அதிகமாக உள்ளதால் தினசரி ஏற்றப்படும் குடிநீர் அளவானது குறைந்து போதிய குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் பழைய அலுவலக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தெப்பக்குள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் பெரம்பலூர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் உள்ள வால்வுகளை மாற்றி புதிதாக Butterfly வால்வு பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1922/2020/இ1) | தீர்மான எண்:466<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.07.2020</td><td>12</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.15 தெற்குத்தெருவில் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக புதிய வால்வுகள் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.25,000/-த்திற்கு மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K.சரவணன் என்பவர் மூலம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1922/2020/இ1)<br><br>அலுவலக குறிப்பு :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் பார்வையிட்டு பதியலாம்.</td><td>தீர்மான எண்:467<br>பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>31.07.2020</td><td>13</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.22 மற்றும் 14 பகுதியில் குப்தா ஸ்டோர் முதல் சௌண்டீஸ்வரி அம்மன் கோவில் தெரு முடிய புதிதாக காவிரி குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.448 நாள்.30.06.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.14% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சுரேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.17% அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மான எண்:468<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.K.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.14% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1659/2020/இ1)<br>அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>31.07.2020</td><td>14</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.2 வடக்கு ரத வீதியில் உள்ள அங்கன்வாடி மையக்கட்டிடத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், பிளாட்பார்ம் மற்றும் Hand Rail அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.447 நாள்.30.06.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.சுரேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.15% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2-ல் உள்ள திரு.K.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1658/2020/இ1)<br>அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:469 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.07.2020</td><td>15</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.7 அர நடராஜன் காலனி மற்றும் வார்டு எண்.24 லெட்சுமிகாந்தபுரம் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் சீரமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.446 நாள்.30.06.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.</td><td>தீர்மான எண்:470 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.ராஜேஷ்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சுரேஷ், ஒப்பந்ததாரர்,<br>துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.16% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.K.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1609/2020/இ1)<br><br>
அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2020</td>
<td>16</td>
<td>
துறையூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தின் முன்புறம் உள்ள பெயர் பலகை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.01.07.2020-ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 17.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>SIGN TEC,<br>KARUMANDAPAM, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.09% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>TECO ASPHALT,<br>K.K.NAGAR, CHENNAI</td><td>மதிப்பீட்டை விட 0.20% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள SIGN TEC, TRICHY என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.09% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண்.1801/2020/இ1)<br><br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண்:471<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 31.07.2020 | **17** | துறையூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அண்ணாசிலை மற்றும் பெரம்பலூர் சாலையில் (சிலோன் ஆபிஸ்) அமைக்கப்பட்டுள்ள MGR சிலை ஆகியவற்றறை பாதுகாக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் அறிவுறுத்தலின்படி இரும்பு கூண்டு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.2080/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:472<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **18** | துறையூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.320 நாள்.07.01.2020-ன் படி 14-வது மத்திய நிதி ஆணையம் (14th CFC) 2019-20 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட் பட்ட பகுதிகளில் 14 எண்ணிக்கை சாலைப்பணிகள் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்கு 28.01.2020-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.337 நாள்.31.01.2020ல் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் வ.எண்.13-ல் உள்ள வார்டு எண்.15 தெற்கு மாரியம்மன் கோவில் தெரு மற்றும் தெற்குத்தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலையினை சீரமைக்கும் பணி நடைபெறும் இடத்தில் குடியிருப்பு கட்டிடங்கள் அதிகமாக உள்ளதாலும், மேற்படி இடத்தின் ஒரு பகுதியில் குடிநீர் மெயின்குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைக்கப்பெறாததாலும், அப்பகுதியிலிருந்து குடிநீர் இணைப்பு கோரி மனுக்கள் வரப்பெறுவதால் இப்பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு தற்போது இப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது.<br>எனவே, மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதாலும் இப்பணி திட்டப்பணி என்பதாலும் பணி முடிக்க வேண்டிய அவசர அவசியம் கருதி இப்பணியினை மாற்றி அமைக்க வேண்டி உள்ளது. ஆதலால் மேற்படி இடத்திற்கு அருகாமையில் உள்ள வார்டு எண்.15 தியாகி சிங்காரவேலர் தெரு மற்றும் வார்டு எண்.13 காமாட்சி அம்மாள் சந்து ஆகிய | தீர்மான எண்:473<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதாலும் இச்சாலைகள் தினசரி மார்க்கெட் அருகில் அமையப்பெறுவதாலும், பிரதான மெயின் சாலையுடன் இணைக்கப்படும் சாலையாக இருப்பதாலும், மேற்படி வ.எண்.13-ல் உள்ள பணிக்கு பதிலாக மேற்படி இடத்தில் சிமெண்ட் சாலை பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K.சரவணன் அவர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளியில் வழங்கிய அதே விலைவிகிதத்தில் இப்பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 34/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம் | |
| 31.07.2020 | **19** | நகராட்சி நிர்வாக அணையர் சென்னை-5 அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 5437/J1/2020 நாள். 09.03.2020-ல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) கொடிய தொற்று நோய் வராமல் இருக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி செயல்பட பொது சுகாதார கிருமி நாசினி பொருட்கள்,பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர பொதுசுகாதார பொருட்கள் வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ.15,00,000/- (பதினைந்து இலட்சம்) செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.810/2020/எச்1<br><br>**அலுவலக குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அதற்கான செலவினத்தினை பொதுநிதி/SDRF(COVID-19) நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:474 அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **20** | பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 14 மின்கலம் பொருந்திய மூன்று சக்கர வாகனம் (BOV) வீடு வீடாக சென்று மக்கும் மக்காத கழிவுகளை தினசரி 400 வீடுகளில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பணியில் தொய்வுகள் ஏற்படாமல் இருக்கவும் சிறப்பாக பணிகள் நடைபெறவும், 14 மின்கலம் பொருத்திய மூன்று சக்கர வாகனங்களில் (BOV) அவ்வப்போது ஏற்படும் சிறு பழுதுகளை சரிப்பாக்க தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனங்களை கொண்டு பணிகளை மேற்க்கொள்ள 2020-2021 ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் ஆண்டு | தீர்மான எண்:475 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. ( ந.க.எண்.2126/2019/எச்1)<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் சேவைக் கட்டணத்தில் மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | |
| 31.07.2020 | **21** | துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் 2020-21 மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020-21 ஆகியவற்றின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைப்பணிகள் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட Auto Cadd வரைபடங்கள் தயார் செய்திடவும், சாலையின் புகைப்படங்கள் தயார் செய்திடவும், கருத்துருக்கள் ஜெராக்ஸ் போடவும் மற்றும் Booklet தயார் செய்திடவும் தொகை ரூ.19700/- மட்டும் இந்நகராட்சி பணி ஆய்வர் திரு.ம.முத்தையா அவர்களால் ரொக்கமாக செலவிடப்பட்டுள்ளது. எனவே, தொகை ரூ.19700/- மட்டும் திரு.ம.முத்தையா பணி ஆய்வர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1955/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:476<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2020 | **22** | இந்நகராட்சி 2019-2020ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை (Administration Report) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2112/சி1/2020)<br><br>**அலுவலக குறிப்பு:** அங்கீகரிக்கலாம் | தீர்மான எண்:477<br>அங்கீகரிக்கப்பட்டது |
| 31.07.2020 | **23** | துறையூர் நகராட்சி வார்டு எண் 03, உள்ள காசி குளத்திலிருந்து மின்மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு 11 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பிறபயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. மேற்படி மின்மோட்டார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்து வருவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. எனவே, அப்பகுதி மக்களுக்கு தடையின்றி குடிநீர் அல்லாத பிற பயன்பாடு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக | தீர்மான எண்:478<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கூடுதலாக ஒரு மின்மோட்டார் கொள்முதல் செய்து இருப்பில் (Stand by) பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1922/2020/இ1)<br><br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-து.தமயந்தி
தனி அலுவலர்

/உண்மை நகல் /